DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, PARAMATHY**

**CC.No. 150/2022**

**PW– 12**

| Name: | பூங்கொடி (LW–3) | Caste: | |
|---|---|---|---|
| Father's/ Husband's Name: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969 ) on the date 29.04.2024

**( Accused absent, petition u/s 317 Cr.P.C is filed and allowed.)**

**முதல் விசாரணை=**

1.நான் தற்போது புங்கம்பாளையத்தில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் தனபால் என்பவரை தெரியும். கடந்த சுமார் 4 வருடத்திற்கு முன்பு காலை 7.30 மணியளவில் எனது வீட்டிலிருந்து நான் 14 நபர்களுடன் மினி ஆட்டோவில் நெல்லிக்காய் பறிக்க பாண்டமங்கலம் செல்ல வேண்டி தனபால் வாகனத்தை ஓட்ட நாங்கள் அனைவரும் பின்னால் உட்கார்ந்து கொண்டு கபிலர்மலை – பாண்டமங்கலம் செல்லும் சாலையில் புங்கம்பாளையத்தில் வண்டி சென்று கொண்டு இருக்கும் போது திடிரென கவிழ்ந்துவிட்டது. எனக்கு வலது பக்க விலா எலும்புகள் வலது பக்க அல்லையில் பலத்த அடிப்பட்டு விட்டது. என்னுடன் வந்த அனைவருக்கும் அடிப்பட்டு விட்டது. அதில் என்னுடன் வந்த சம்பூர்ணம் விபத்தில் இறந்துவிட்டார். பின்பு 108 ஆம்புலன்ஸ் மூலம் வேலூர் அரசு மருத்துவனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். பின்பு மேல்சிகிச்சைக்காக

நாமக்கல் அரசு மருத்துவமனையில் சேர்ந்தேன். அங்கு ஒரு வார காலம் சிகிச்சையில் இருந்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை– இல்லை.</u>**

Sd/J.Kannan,
Judicial Magistrate,
Paramathy.